

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.3.2026), மே 17 இயக்கத்தினர் இரயில் நிலையங்களில் உள்ள இந்தி எழுத்துக்களை அழித்து போராட்டம் நடத்தியபோது இரயில் விபத்தில் சிக்கி சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வரும் மே–17 இயக்கத்தைச் சார்ந்த சிவக்குமார் (ஏ) சிவா திலீபன் அவர்களின் உடல்நலம் குறித்து அவரது குடும்பத்தினரிடம் விசாரித்து, அவருக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை விவரங்கள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். இந்நிகழ்வின்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ, ஆகியோர் உடனிருந்தனர்.

### உடன்குடியில் ரூ.13,077 கோடியில் நிறுவப்பட்டுள்ள 2X660 மெகாவாட் மிக உய்ய

# அனல் மின் நிலையத்தின் அலகு 1-ல் மின்சார உற்பத்தி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலியில் தொடங்கி வைத்தார்!

*சென்னை, மார்ச் 15–*

**தூத்துக்குடி மாவட்டம், உடன்குடியில் ரூ.13,077 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ள 2X660 மெகாவாட் மிக உய்ய அனல் மின் நிலையத்தின் அலகு 1ல் மின் உற்பத்தியை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

முதலமைச்சர் மு.கஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.03.2026) தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக தூத்துக்குடி மாவட்டம், உடன் குடியில், தமிழ்நாடு மின்உற்பத்தி கழகம் (TNPGCL) சார்பில், 13,077 கோடி ரூபாய் செலவில் புதியதாக நிறுவப்பட்டுள்ள 2x660 மெகாவாட் திறன் கொண்ட மிக உய்ய (Super Critical) அனல் மின் நிலையத்தின் அலகு1னை திறந்து வைத்து, மின்சார உற்பத்தினை தொடங்கி வைத்தார்.

தமிழ்நாட்டில் மின்உற்பத்தி திறனை அதிகரித்து, மாநிலத்தின் வளர்ச்சிக்கும், தொழில்துறை முன்னேற்றத்திற்கும் தேவையான நம்பகமான மின்சாரத்தை வழங்கும் நோக்கில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசால் மின் திட்டங்கள் அனைத்தும் போர்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு உடனடியாக இயக்கத்திற்கு கொண்டு வர தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது.

மாநிலத்தின் வலுவான எரிசக்தி கட்டமைப்பினை கருத்தில் கொண்டு இவ்வரசு பல்வேறு முன்னோடி முயற்சிகளை எடுத்ததன் விளைவாக தமிழ்நாட்டில் அனல் மின் நிலையங்கள், எரிவாயு மின் நிலையங்கள் மற்றும் மரபுசார எரிசக்தி ஆற்றல் மூலங்களான காற்றாலை மின் உற்பத்தி, சூரிய ஒளி மின் உற்பத்தி ஆகியவற்றின் வாயிலாக மின் உற்பத்தியை பெருக்குவதற்க்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் விளைவாக, தமிழ்நாடு எரிசக்தித் துறையில் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. அண்மையில் வடசென்னை அனல் மின் நிலையம்-III ல் மின் உற்பத்தி அதன் முழு கொள்ளளவான 800 மெகாவாட் உற்பத்தி செய்யப்பட்டு வணிக பயன்பாட்டிற்க்கு கொண்டுவரப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதன் அடுத்த கட்டமாக தூத்துக்குடி மாவட்டம், உடன்குடியில் 13,077 கோடி ரூபாய் செலவில் பாரத மிகுமின் நிறுவனம் (BHEL) வாயிலாக நிறுவப்பட்டுள்ள 2X660 மெகாவாட் மிக உய்ய அனல் மின் நிலையத்தின் அலகு 1ன் பணிகள் முடிக்கப்பட்டு, பல்வேறு கட்ட சோதனை ஓட்டங்களுக்கு பிறகு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்றைய தினம் காணொலி காட்சி வாயிலாக மின் உற்பத்தி தொடங்கி வைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்க்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

**உடன்குடி மிக உய்ய அனல் மின் நிலையத்தின் சிறப்பு அம்சங்கள்**

மிக உய்ய நிலை வெப்ப தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நிறுவப்படும் அனல் மின்நிலைய திட்டங்கள் பிற அனல் மின் திட்டங்களை ஒப்பிடும் போது, 5 முதல் 6 சதவீதம் வரை அதிக திறன்மிக்கது ஆகும். எனவே, இதன்மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்க்கு எரிபொருள் செலவு குறைவதுடன் மின் உற்பத்தியினை தொடங்குவதற்கு குறைவான நேரமே தேவைப்படும்.

இந்த அனல் மின் நிலையத்திற்க்கு தேவையான நிலக்கரி தமிழ்நாட்டின் தனித்துவமான கடலோர துறைமுகத்துடன் அமைக்கப்பட்ட முதல் திட்டமாக செயல்படுத்தப்பட்டுள்ளது. கடலோரத்தில் பிரத்யேகமாக 9 கிலோ மீட்டர் தூரத்தில் அமைக்கப்பட்ட துறைமுகத்தின் நிலக்கரி இறங்குதளங்கள் மூலம் இரண்டு முழுவதும் மூடிய அமைப்புள்ள கன்வேயர் பெல்ட் வாயிலாக மணிக்கு தலா 2000 டன் நிலக்கரியை நேரடியாக மின் நிலையத்திற்கு கொண்டு செல்லும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதால் நிலக்கரி போக்குவரத்து செலவு குறைந்து, சுற்றுச்சூழல் பாதுகாப்புடன் கூடிய எரிபொருள் விநியோகம் சீராக நடைபெற உதவுகிறது.

இத்திட்டத்தின் மூலம் ஒரு யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்ய நிலக்கரி நுகர்வு 0.50 முதல் 0.55 கிலோ கிராம் அளவு மட்டுமே தேவைப்படுவதால், கார்பன்டைஆக்சைடு உமிழ்வு 25 முதல் 30 சதவீதம் வரை குறைந்து சுற்றுச்சூழலுக்கு உகந்த திட்டமாகவும் உள்ளது.

இம்மின் நிலையத்திற்கு தேவையான குளிரூட்டும் கோபுரம், பாய்லர், பணியாளர் குடியிருப்புகள் உள்ளிட்ட அனைத்து தண்ணீர் தேவைகளுக்கும் அனல் மின்நிலைய வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள நாளொன்றுக்கு 13 மில்லியன் லிட்டர் கொள்ளவுள்ள கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் வாயிலாகவே பெறப்படுவதால் நிலத்தடி நீர் மற்றும் தாமிரபரணி நீர் பயன்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

இந்த மின் நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை, 400 கிலோ வோல்ட் வளிம காப்பு துணைமின் நிலையம் வாயிலாக மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டு மின் பகிர்மானம் செய்யப்படும். இத்திட்டத்தின் மூலம், மாநிலத்தின் மின் உற்பத்தித் திறன் மேலும் அதிகரித்து, மாநிலத்தின் மின்சாரத் தேவையினை பூர்த்தி செய்ய துணைபுரிவதுடன், வெளி சந்தையில் மின் கொள்முதல் செய்வது குறைக்கப்படும். இதனால் மின்சார வாரியத்தின் நிதி நிலை மேம்படுவதுடன் நம் மாநிலத்தின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கும் முக்கிய பங்களிக்கும்.

உடன்குடி மின் திட்ட வளாகத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக ஒன்றரை இலட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டம் தொடங்கப்பட்டு இதுவரை 52 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த திட்டம் செயல்பாட்டுக்கு வந்ததன் மூலம், தமிழ்நாடு 2030க்குள் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் வளர்ச்சி என்ற இலக்கினை அடைய ஏதுவாகவும், தென் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும், மின்சார தேவைக்கும் முக்கிய பங்களிப்பை அளிக்கும். மின்உற்பத்தி திறன் மேலும் வலுப்பெற்று, மின்விநியோகம் மேம்படுவதுடன் தொழில், வேளாண்மை மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தேவையான மின்சாரம் நிலையான முறையில் வழங்கப்படுவதற்கு பேருதவியாக இருக்கும்.

இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கூடுதல் தலைமை செயலாளர்/ தமிழ்நாடு மின்சார வாரிய நிறுவனங்களின் தலைவர் டாக்டர். ஜெ. ராதாகிருஷ்ணன், எரிசக்தித் துறை கூடுதல் தலைமை செயலாளர் (மு.கூ.பொ.)மங்கத் ராம் சர்மா, இயக்குநர் (திட்டங்கள்) ஜான் டால்டன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


காணொலிக் காட்சி வாயிலாக தூத்துக்குடி மாவட்டத்திலிருந்து மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர் சண்முகையா, தமிழ்நாடு மின் உற்பத்தி கழக மேலாண்மை இயக்குநர் ம.கோவிந்தராவ், மாவட்ட ஆட்சித் தலைவர் க.இளம்பகவத், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### வேலூர் தெற்கு மாவட்ட

## தொண்டர் அணி அமைப்பாளர் டி.என்.பைரோஸ் மறைவு !

### கார்த்திகேயன் எம்.எல்.ஏ, மாஸ்டர் பெ. சேகர் அஞ்சலி !

*வேலூர் மார்ச் 15–*



வேலூர் தெற்கு மாவட்டத் தொண்டர் அணி அமைப்பாளர் டி.என். பைரோஸ் அவர்கள் 12.3. 2026 அன்று இரவு மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரது மறைவு செய்தி அறிந்து வேலூர் சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன்,

மாநிலத் தொண்டர் அணிச் செயலாளர் மாஸ்டர் பெ.சேகர், மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் எம்.நூருல்லா, இராணிப்பேட்டை மாவட்டத் தொண்டர் அணி அமைப்பாளர் எம்.கே.சிவா, காவேரி அப்துல் மாலிக்,

குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் வி.அமுல்விஜயன்,உள்ளிட்ட கழக நிருவாகிகள் அஞ்சலி செலுத்தினார்கள்.

அன்னாரது உடல் நேற்று முன்தினம் (13.3. 2026)நல்லடக்கம் செய்யப்பட்டது.



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் பொதுப்பணித்துறையின் சார்பில் சேலம் மாவட்டம், பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகை வளாகத்தில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள பொதுப்பணித்துறை தர கட்டுப்பாட்டு ஆய்வகத்தினை 12.03.2026 அன்று திறந்து வைத்தார்கள். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன், மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

### தமிழ்நாட்டுக்கு திட்டங்களும் இல்லை, அடுப்பு எரிக்க கேஸ் சிலிண்டரும் இல்லை,

### தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் NDA அரசையும், அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து

# கடலூர் கிழக்கு மாவட்டத்தில் ஒருங்கிணைந்த ஒன்றியங்கள், நகரம், பகுதி, பேரூர்களில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!



ஒன்றிய பா.ஜ.க. NDA அரசின் தவறான வெளியுறவுக் கொள்கையினாலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காததன் விளைவாகவும் இன்று நாடு முழுவதும் சமையல் கேஸ் சிலிண்டருக்கும் - வணிக ரீதியிலான கேஸ் சிலிண்டருக்கும் தட்டுபாடு ஏற்பட்டு மக்கள் அவதியுற்று வருகின்றனர். உணவகங்கள், வணிக நிறுவனங்கள் சரிவர இயங்க முடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளது. சிறுகுறு தொழில்கள் உள்ள அதிக தொழில்வளமிக்க தமிழ்நாடு இந்த கடுமையான பாதிப்பை சந்திக்கும் என்பதால் ஒன்றிய அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து நிலைமையை சரிசெய்ய வேண்டும் என முதலமைச்சர் அவர்கள் இந்திய பிரதமர் மோடி அவர்களுக்கு கடிதம் வாயிலாக வலியுறுத்தி இருந்தார். ஆனால் தற்போது வரை மக்களிடையே நிலவும் அச்சத்தைப் போக்கி நிலைமையை சீராக்க முறையான நடவடிக்கை எடுக்கவில்லை ஒன்றிய NDA அரசு. நாடாளுமன்றத்தில் இதைப்பற்றி பேசவே பிரதமர் மறுத்து வருவது மற்றும் தமிழ்நாட்டிற்கான கல்வி நிதி, நூறு நாள் வேலை திட்ட நிதி, குடிநீர் இணைப்பு நிதி என எந்த நிதியையும் ஒதுக்காமல் நிறுத்தி வைத்திருப்பது. கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டம், ஒசூர் விமான நிலையம் என எந்தவொரு வளர்ச்சித் திட்டத்திற்கும் அனுமதி தராமல் முட்டுக்கட்டை போட்டு வருவது. மும்மொழி திணிப்பு என்ற பெயரில் தமிழ்மொழியை அழிக்க துடிப்பது, கீழடி அகழ்வாய்வு முடிவுகளை ஏற்க மறுப்பது என தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சித்து வருகிறது ஒன்றிய பா.ஜ.க அரசு இப்படி தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் NDA அரசையும் அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து இன்று (15.03.2026 ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணியளவில், கடலூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள ஒருங்கிணைந்த ஒன்றியங்கள், நகரம், பகுதி, பேரூர்களில் ‘மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி’ கட்சிகளின் சார்பில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெற உள்ளது.


அதுசமயம் சம்மந்தபட்டவர்கள் அந்தந்த ஒருங்கிணைந்த ஒன்றியங்கள், நகரம், பகுதி, பேரூர்களில் நடைபெறும் ஆர்பாட்டத்தில், கடலூர் கிழக்கு மாவட்டத்தை சேர்ந்த திமுக மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், ஊராட்சி மற்றும் கிளை, வார்டு கழக செயலாளர்கள், பிரதிநிதிகள் மற்றும் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர்கள், முன்னாள் மாவட்டக்குழு, ஒன்றியக்குழு ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்பு முன்னாள் பிரதிநிதிகள், மாவட்ட, மாநரக, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), கழக தோழர்கள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளில் நிர்வாகிகள் மற்றும் தோழர்கள், ஸ்டாலினின் மகளிர் படை சேர்ந்த நிர்வாகிகள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக அவரவர் பகுதிகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

### கேஸ் சிலிண்டர் தட்டுப்பாடு, தமிழ் நாட்டை தொடர்ந்து வஞ்சிக்கும் பா.ஜ.க. அரசையும், துணை போகும் அ.தி.மு.க. வையும் கண்டித்து

# சேலம் மேற்கு மாவட்டத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்ட கழக செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிக்கை!



*சேலம், மார்ச் 15-*

சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஒன்றிய பா.ஜ.க NDA அரசின் தவறான வெளியுறவுக் கொள்கையினாலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காததன் விளைவாகவும் இன்று நாடு முழுவதும் சமையல் கேஸ் சிலிண்டருக்கும் வணிக ரீதியிலான கேஸ் சிலிண்டருக்கும் தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் ஏற்பட்டு சாதாரண மக்கள் பாதிப்புக்கு உள்ளாகி வருவதையும், தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் பாஜக அரசையும், அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து சேலம் மேற்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூராட்சிகளில் இன்று (15.03.2026-ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணியளவில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” கீழ்கண்ட நிகழ்ச்சி நிரல்கள் படி நடைபெறும்.

அதுசமயம் எடப்பாடி நகரத்தில் நடைபெறும் கண்டன ஆர்பாட்டத்தில் சேலம் மேற்கு மாவட்ட கழக செயலாளர் டி.எம். செல்வகணபதி, எம்.பி. தலைமையில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி தோழமை கட்சி மாவட்ட தலைவர்கள் முன்னிலையில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்”நடைபெறஉள்ளது.

ஒன்றியம்/நகரம். கண்டன ஆர்பாட்டம் நடைபெறும் இடம் விவரம் வருமாறு:-

எடப்பாடி நகரம்., எடப்பாடி பேருந்து நிலையம் அருகில். சங்ககிரி நகரம், சங்ககிரி கிழக்கு ஒன்றியம்,

சங்ககிரி மேற்கு ஒன்றியம். சங்ககிரி பழைய பேருந்து நிலையம் அருகில் மகுடஞ்சாவடி வடக்கு ஒன்றியம், மகுடஞ்சாவடி தெற்கு ஒன்றியம்.மகுடஞ் சாவடி பஸ் ஸ்டாப் கொங்கணாபுரம் தெற்கு ஒன்றியம், கொங்கணாபுரம் வடக்கு ஒன்றியம்.

கொங்கணாபுரம் பேருந்து நிலையம் அருகில் மேட்டூர் நகரம் மேட்டூர் பேருந்து நிலையம் அருகில்

நங்கவள்ளி மத்திய ஒன்றியம், நங்கவள்ளி வடக்கு ஒன்றியம், நங்கவள்ளி தெற்கு ஒன்றியம்.ந ங் க வள்ளி பேருந்து நிலையம் அருகில் எடப்பாடி கிழக்கு ஒன்றியம், எடப்பாடி மேற்கு ஒன்றியம்.பூ ல ா ம் பட்டி பேருந்து நிலையம் அருகில் கொளத்தூர் ஒன்றியம் கொ ள த் தூ ர் பேருந்து நிலையம் அருகில்

மேச்சேரி கிழக்கு ஒன்றியம், மேச்சேரி மேற்கு ஒன்றியம். மேச்சேரி பேருந்து நிலையம் அருகில்தாரமங்கலம் மேற்கு ஒன்றியம்.

**பாப்பம்பாடி பஸ் ஸ்டாப்தாரமங்கலம் நகரம்**

தாரமங்கலம் பேருந்து நிலையம் அருகில் இடங்கணசாலை நகரம். இடங்கணசாலை பேருந்து நிலையம் அருகில்

மதசார்பற்ற கூட்டணி கட்சிகளின் சார்பில் நடைபெறும் இக்கண்டன ஆர்பாட்டத்தில் மதசார்பற்ற கூட்டணி தோழமை கட்சிகளை சேர்ந்த அனைத்து அமைப்புகளின் நிர்வாகிகள், தோழர்கள் மற்றும் சேலம் மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுகுழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைகழக, வார்டு கழக செயலாளர்கள் - நிர்வாகிகள், அனைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் நிர்வாகிகள், இந்நாள்முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், பாக நிலை முகவர்கள் (கூடுஹ2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (கூடுஉ), பூத் டிஜிடல் ஏஜெண்ட் (கூனுஹ) மற்றும் பொதுமக்கள் பங்கேற்கின்ற வகையில் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் ஏற்பாடு செய்திட வேண்டும். தமிழ்நாட்டுக்கு திட்டங்களும் இல்லை, அடுப்பு எரிக்க கேஸ் சிலிண்டரும் இல்லை, தமிழ் நாட்டு மக்களை தொடர்ந்து வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசையும் அதற்கு ஒத்து ஊதும் அ.தி.மு.க. - வையும் கண்டித்து முழக்கங்களை எழுப்பி ஆர்பாட்டம் செய்திட வேண்டுமென கேட்டுக்கொள்றேன்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## தி.மு.க. வர்த்தகர் அணி

## மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் காசி முத்துமாணிக்கம் அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி – மாவட்டச் செயலாளர்/ பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. வர்த்தகர் அணி அணியின் மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### திருப்பூர் கிழக்கு மாவட்டம்

தலைவர் – வைகை. கே. மணி 13/29, முத்துக்குமார் நகர், வெள்ளக்கோவில் – 638111, திருப்பூர் மாவட்டம்.

துணைத் தலைவர் – பி. சோமசுந்தரம் 3/833, விக்னேஷ் வரா நகர், வீரபாண்டி அஞ்சல் – 641605, திருப்பூர் மாவட்டம்.

அமைப்பாளர் – ஜி. ரவிச்சந்திரன் 113, ஏரச்சப்பாடி அஞ்சல், தாராபுரம் – 639202, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் – 1) கி. சோமசுந்தரம் 18/759, புஷ்பகிரி நகர், சேனாபதிபாளையம், காங்கேயம் – 638701, திருப்பூர் மாவட்டம். 2) எஸ். ஸ்ரீதரன் ஏ.எல்.ஜி.எஸ். தெரு, அலங்கியம் சாலை, தாராபுரம் – 638656, திருப்பூர் மாவட்டம். 3) எஸ். மகேஷ் 13/75, எருக்கலங்காட்டுபுதூர், சிவன்மலை அஞ்சல், காங்கேயம் – 638701, திருப்பூர் மாவட்டம். 4) ஆர். மோகன்ராஜ் 5314, சிவசக்திபுரம், நத்தக்காடையூர், காங்கேயம் – 638701, திருப்பூர் மாவட்டம். 5) எஸ். தங்கராஜ் 2/177, குருநாதன் கோட்டை, மாம்பாடி, தாராபுரம் தாலுக்கா – 638106, திருப்பூர் மாவட்டம். 6) ஈ.என். சிவக்குமார் எல்லப்பாளையம்புதூர், நெழலி அஞ்சல், கொடுவாய் வழி, திருப்பூர் மாவட்டம். 7) எம்.பி. மனோகரன் 209, மணியகாரர் வீதி, மேலப்பாளையம், சென்னிமலை – 638051, திருப்பூர் மாவட்டம். 8) கா. பாலமுருகன் 5ஏ, அண்ணா நகர், மூலனூர், தாராபுரம் – 638106, திருப்பூர் மாவட்டம்.

### திருப்பூர் தெற்கு மாவட்டம்

திருப்பூர் தெற்கு மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட சி. தங்கராஜ் அவர்கள் மடத்துக்குளம் மேற்கு ஒன்றிய பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதால், அவருக்கு பதிலாக **கு. தம்பிது**ரை (36/7, ஐஸ்வர்யா நகர், மடத்துக்குளம் வட்டம், திருப்பூர் மாவட்டம் – 642154) அவர்கள் திருப்பூர் தெற்கு மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளராகவும் ;

மேலும், **கே.பி. முருகேச**ன் (592, திரு.வி.க. வீதி, ஏ.என். பாளையம், கணியூர், திருப்பூர் மாவட்டம் – 642154), **ம. நித்தியானந்**தம் (1/154பி, உடுமலை பிரதான ரோடு, பூளவாடி, உடுமலைப்பேட்டை வட்டம், திருப்பூர் மாவட்டம் – 642206), **ப. செந்தில்வே**ல் (68, பழனி மெயின் ரோடு, கிருஷ்ணாபுரம், மடத்துக்குளம் வட்டம், திருப்பூர் மாவட்டம் – 642154) ஆகியோர் திருப்பூர் தெற்கு மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

### திருவள்ளூர் மேற்கு மாவட்டம்

திருவள்ளூர் மேற்கு மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளராக **கே.அ.மதியழ**கன் (பிள்ளை விநாயகர் கோயில் தெரு, ஒண்டிகுப்பம், மணவாள நகர், வெங்கத்தூர் ஊராட்சி, திருவள்ளூர் மாவட்டம்) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

“அண்ணா அறிவாலயம்” சென்னை - 18
நாள்- 12-03-2026

**காசி முத்துமாணிக்கம்**
செயலாளர்
தி.மு.க. வர்த்தகர் அணி